# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வழக்கு | : | OS. 342/2024 | கிராமம் | : | தென்னூர் |
| சாட்சி | : | வா.சா–1 | வட்டம் | : | உடையார்பாளையம் |
| பெயர் | : | ராஜராஜசோழன் (எ) பிரசாத் | வயது | : | 46 |
| த/பெ | : | ராஜாதிருசங்கம் | தொழில் | : | தனியார் நிறுவனத்தில் பணி |

2026–ம் ஆண்டு ஜுலை 13–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.இசக்கிதுரை, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

## முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் 2ம் வாதி. வா.சா.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட விவரங்களை நான் படித்துப்பார்த்து சரி என்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டு நான் என்னுடைய கையொப்பங்களை இட்டேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன்.

1. 22.11.2019 தேதி அசல் வழக்கு எண் 323/2012 ல் வழங்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1.
2. 22.11.2019 தேதி அசல் வழக்கு எண் 323/2012 ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2.
3. தாவா சொத்துக்களுக்கான கணினி பட்டாக்கள் (எண்ணிக்கை 6) வா.சா.ஆ.3.

4. அசல் வழக்கு எண் 323/2012 ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தின் உண்மை நகல் வா.சா.ஆ.4.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.